## ஆகஸ்ட் - 27

**"இது முதற்கொண்டு நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்."**
**- 2கொரி 5 : 16**

நம்மிடமாவது அல்லது மற்ற கிறிஸ்துவின் சீஷர்களிடத்திலாவது உள்ள மாம்சத்தின் தவறுதல்களை நாம் கவனிக்கக் கூடாது என்று அப்போஸ்தலன் எண்ணவில்லை. எல்லா மாம்ச பலவீனங்களுக்கு விரோதமாக போராட வேண்டும். புது இருதயம், சித்தம், மனது, இவைகளின் நலனைக்கருதி அவைகளோடு கடுமையாக போராட வேண்டும். ஆயினும் நாம் இவைகளுக்கும் பலவீனமான சாவுக்கேதுவான சரீரத்துக்கும் ஊடேயுள்ள வித்தியாசங்களை நாம் தெளிவாய் அறிந்துக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். சகோதரனின் அல்லது சகோதரியின் நலனைக் கருதியும் சபையின் நலனைக் கருதியும் கண்டிக்கவோ அல்லது மற்றவகையில் தவறான போக்கை சரிசெய்யவும் அவசியம் ஏற்படும்போது, நாம் அந்த சகோதரனையோ அல்லது சகோதரியையோ நேசிக்கவும், அவர்களிடம் அனுதாபம் கொள்ளவும் வேண்டும். இந்த இரண்டு வகுப்புக்களையும் தனியாய் எப்படி நாம் அறிந்துக் கொள்ளலாம் என்பதை அப்போஸ்தலன் விவரிக்கிறார். அதாவது, மனந்திரும்பாதவன் மாம்சத்தின் காரியங்களில் அக்கறைகொள்ளுவான். மனந்திரும்பினவன் ஆவியின் காரியங்களில் அக்கறைக்கொள்ளுவான்.

**- Z '03, 170(R 3200)**

மனித சுபாவத்தின்படி மற்றவர்களைபற்றி எண்ணுவதும் அவர்களை பாராட்டுவதும் தான் அவர்களை மாம்சத்தின்படி அறிவதாகும். அழகு, ஆண்பெண் இனம், செல்வம், பலம், அந்தஸ்து, நன்மதிப்பு, சேர்க்கை, ஆகிய மனிதரிலுள்ள ஏதேனும் ஒன்றுக்கு இணக்கமாக மற்றவர்களை மதித்து அவர்களை நடத்துகிறவன் மாம்சத்தின்படி அவர்களை அறிகிறான். சகோதரர் சிலரிடத்தில் இவைகள் இல்லாதிருந்தால் பிரியமாயிருக்கிறவனைவிட இவைகளுக்காகவும், இதைப் போலொத்த அனுகூலங்களுக்காகவும் நாம் அவர்களிடத்தில் அதிக பிரியமாயிருக்கிறதாகக் கண்டால், அவர்களை நாம் மாம்சத்தின்படி அறிகிறோம். மற்றவர்கள்மேல் நாம் கொண்டிருக்கிற மதிப்பு, கர்த்தருக்கும் சத்தியத்துக்குமுள்ள அவர்களுடைய சம்பந்தத்தை ஆதாரமாகக் கொண்டதாயிருக்க வேண்டும். எவ்வளவு அதிகமாய் நாம் அவர்களில் கிறிஸ்துவைப் பொலொத்த தன்மையைப் பார்க்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் அவர்களை உயர்வாக மதிக்க வேண்டும். எவ்வளவு குறைவாக நாம் அவர்களில் கிறிஸ்துவைப் போலொத்தத் தன்மையை பார்க்கிறோமோ, அவ்வளவு குறைவாக நாம் அவர்களை மதிக்க வேண்டும். இவ்விதமாக அவர்களை ஆவியின்படி அறிகிறோம்.

**- P '36, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

உபா 33:9; 1சாமு 2:29; 1தீமோ 5:21; 2கொரி 11:22; கலா 2:11-14; மத் 10:37; 12:48-50; யோவா 2:4; 6:63; 15:14; கலா 2:5,6; 5:6.

**கோபுர வாசிப்பு** : Z '13, 300 (R 5325)

**வினாக்கள்** : இந்த வசனத்தின்படி இந்த வார அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு வரவேற்கப்பட்டன? அதில் அனுகூலமாக அல்லது பிரதிகூலமாக இருந்தவை எவை? பலன்கள் எவை?